# வயலும் வாழ்வும்

---

**Que 1: வீட்டில் வேளாண்மை செய்யும் பொருட்டு மாணவர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பெட்டிச் செய்தி தயாரிக்க *Marks :(4)***

**Ans:** வீட்டிற்குத் தேவையான காய்கறித் தோட்டம்-பூந்தோட்டம்

இயற்கை வளம்-தோட்டப் பராமரிப்பு-அறிவுரை-செய்தி வடிவம்

**Que 2: உலகத்தின் ஆணிவேர் என வள்ளுவர் யாரைக் கூறுகிறார்?**

**அ)மருத்துவர் ஆ)பொறியியலாளர்**

**இ)உழவர் ஈ)கலைஞர் *Marks :(1)***

**Ans:** இ)உழவர்

**Que 3: சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்**

**உழந்தும் உழவே தலை.**

**உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃது ஆற்றாது**

**எழுவாரை எல்லாம் பொறுத்து.---இப்பாடல்கள் வழி நின்று உழவின்**

**பெருமையை விளக்கிச் கட்டுரை எழுதுக. *Marks :(8)***

**Ans:** கட்டுரை-உழவுத்தொழிலின் சிறப்பு-உணவு –அடிப்படைத் தேவை-

உலகில் உழவர்களே சிறந்தவர்கள் போல்வன.வடிவம்-நடை

**Que 4: பேராசையின் பரிசு கதைக் கருத்தினை விமர்சிக்க *Marks :(5)***

**Ans:**

- பேராசையின் தீமை
- மன்னிக்கும் குணம்—விட்டுக் கொடுக்கும் பண்பு-உறவின் மேன்மை

**Que 5: ஆயிரம் முத்தினிலே**

**ஆராய்ந்தெடுத்த முத்து**

**தொண்ணூறு முத்தினிலே-கண்ணே நீ**

**துழாவி எடுத்த முத்து.—தாலாட்டுப் பாடல்களில்**
**ணலாகும் சிறப்பியல்புகளை எழுதுக. *Marks :(4)***

**Ans:**

- வட்டாரத்தின் சிறப்பியல்புகள்
- சமூக நிலை
- பிள்ளைப் பேறு- போற்றுதல்

**Que 6: சூடாத வாகை என்பது எதனைக் குறிக்கிறது?**

**அ)மண்   ஆ)மரம்   இ)வானம்   ஈ) காற்று** ***Marks :(1)***

**Ans:** ஆ) மரம்

**Que 7: வாடாத வாகை என்பது எதனைக் குறிக்கிறது?**

**அ) மரம்   ஆ)பூ   இ)வெற்றி   ஈ) தோல்வி** ***Marks :(1)***

**Ans:** இ) வெற்றி

**Que 8: பூவா வேங்கை என்பது எதனைக் குறிக்கிறது?**

**அ) மரம்   ஆ)புலி**

**இ) நெல்   ஈ)பூ** ***Marks :(1)***

**Ans:** ஆ) புலி

**Que 9: 1மக்களின் சிந்தனைகளையும் பழக்கவழக்கங்களையும் உள்ளபடி**

**உணர்ந்து கொள்ளப் பெரிதும் பயன்படுவன ---------------------------**

**அ) சிலேடைப்பாடல்   ஆ) திரைப்படப்பாடல்**

**இ) நாட்டுப்புறப்பாடல்   ஈ) மெல்லிசைப்பாடல்** ***Marks :(1)***

**Ans:** இ)நாட்டுப்புறப்பாடல்

**Que 10: இரசாயன உரங்களும் பூச்சிக்கொல்லி மருந்துகளும் வேளாண்மைக்குத் தீமையே என்னும் பொருளில் நடைபெறும் விவாதத்தில் பங்கேற்பதற்கான குறிப்பு தயாரிக்க.** ***Marks :(4)***

**Ans:** மண்,நீர் மாசு மனிதருக்கும் பிற உயிரினங்களுக்கும் விளைவிக்கும் தீமைகள். நோய்கள்-வடிவம்

**Que 11: சுற்றுச்சூழல் தினத்தில் இயற்கை வேளாண்மையும்  சுற்றுச்சூழலும் என்னும்**

**தலைப்பில் பள்ளியில் நடைபெறும் கட்டுரைப் போட்டியில் பங்கேற்பதற்கான கட்டுரை தயாரிக்க.** ***Marks :(8)***

**Ans:** கட்டுரை வடிவம்-இயற்கை வேளாண்மை--நன்மைகள்--சுற்றுச்சூழல் பாதுகாப்பு

**Que 12: கீழ் வரும் கவிதை வரிகளை விமர்சித்துக் குறிப்பு தயாரிக்க.**

**பிழிந்த கரும்பின்**

**கழிவுகளில்**

**எறும்பின் கால்களால்**

**ஊர்ந்து வருகிறது**

**தை**

**பசியில் குழிந்து**

**எலி வளைகளாகின்றன** ***Marks :(4)***

**Ans:** ரசாயன உரங்கள் --தீமைகள்---விமர்சிக்கும் முறை

**Que 13: ஜூன்  5-ஆம் தேதி சுற்றுச்சூழல் தின விழாவைக் கொண்டாடுவதற்கான நிகழ்ச்சிகளைப் பட்டியலிடுக** ***Marks :(4)***

**Ans:** வடிவம்-கருத்துகள்

**Que 14: இயற்கை உரங்கள் சிலவற்றைப் பட்டியலிட்டு நன்மைகளை விளக்குக** ***Marks :(4)***

**Ans:** இலை தழைகள்--உயிரியக் கழிவுகள் போல்வன -வடிவம்

**Que 15: சுற்றுச்சூழல் தின விழாவில் பள்ளியில்  உரையாற்றுவதற்கு இயற்கை**

**வேளாண்மையும்  சுற்றுச்சூழல் பாதுகாப்பும் என்னும் பொருளில் சொற்பொழிவு தயாரிக்க.** ***Marks :(8)***

**Ans:** முகமன்-இயற்கை வேளாண்மையின் நன்மைகள்--நீர்-மண்-காற்று--மாசடையாதிருத்தல்-உடல்நலத்திற்கு தீங்கு இல்லை

**Que 16: இயற்கை வழி வேளாண்மை எதனைப் பாதுகாக்கிறது?**

**அ) மண்வளம்** **ஆ)மரவளம்**

**இ)காற்று** **ஈ)நீர்** ***Marks :(1)***

**Ans:** அ) மண்வளம்

**Que 17: தென்னை விவசாயம் எதிரிடும் பிரச்சினைகளை விளக்கித் தலையங்கம் எழுதுக.** ***Marks :(6)***

**Ans:** தலையங்கம்-வடிவம்  தென்னை மரங்களின் அழிவு-காரணங்கள்-மேம்பாட்டுத் திட்டங்கள்-பணஉதவி காப்பீடுகள்.

**Que 18: மண்நேசம் கதையின் கதை மாந்தரான  பாட்டையாவின் பண்பு நலன் குறித்துக் குறிப்பு எழுதுக.** ***Marks :(4)***

**Ans:** பாட்டையா-- பண்புகள்--வடிவம்- குறிப்பு

**Que 19: வேளாண்மையில் செயற்கை உரப்பயன்பாட்டின் தீமைகள் என்னும் தலைப்பில் வானொலி உரை தயாரிக்க.** ***Marks :(6)***

**Ans:** ரசாயன உரங்களின் தீமைகள்-மண்-நீர்-மாசடைதல்-கொடிய நோய்கள்-ரசாயன உரங்கள் தவிர்ப்பு

**Que 20: இயற்கை வேளாண்மை செய்வதன் அவசியத்தை எடுத்துரைக்கும் வகையில்**

**பத்திரிகைக்குத் தலையங்கம் எழுதுக.** ***Marks :(6)***

**Ans:** தலையங்கம் வடிவம்-1-மண் பாதுகாப்பு-நீர் பாதுகாப்பு-நல்ல பயிர்களை

விளைவித்தல்-நோயில்லாத வாழ்க்கை-திட்டங்கள் –தீர்வுகள்.

**Que 21: கீழ் வரும் பாடலை விளக்கிக் குறிப்பு தயாரிக்க.**

**வாரிக் களத்தடிக்கும்,வந்த பின்பு கோட்டை புகும்**

**போரில் சிறந்து பொலிவாகும் சீருற்ற செங்கோல்**

**மேனித் திருமலைரா யன் வரையில்**

**வைக்கோலும் மால் யானையாம்.** ***Marks :(4)***

**Ans:** பாடல் விளக்கம்---சிலேடை விளக்கம்

**Que 22: தமிழ் இலக்கியங்களில் வேளாண் செய்திகள் என்னும் தலைப்பில் கட்டுரை தயாரிக்க.** ***Marks :(8)***

**Ans:** வடிவம்-நடை - நிலப்பாகுபாடு-இயற்கை வேளாண்மை – நன்மைகள்-திருக்குறள்-உழவு-மேற்கோள்கள்

**Que 23: வேளாண்மையில் சிறந்து விளங்குவதற்கு ஒரு நாடு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைக் குறிப்பிட்டு பத்திரிகைத் தலையங்கம் எழுதுக.** ***Marks :(6)***

**Ans:** வடிவம்- உழவர்களின் நலன்

கட்டுப்பாடற்ற கடன் வசதி –வேளாண்மையில் ஏற்படும் பிரச்சினைகள்

**Que 24: உங்கள் பகுதியிலுள்ள விவசாயி ஒருவரைப் பேட்டி காண்பதற்காக வினா நிரல் தயாரிக்க(ஆறு வினாக்கள்)** ***Marks :(6)***

**Ans:** பொருத்தமான 6 வினாக்கள்.

**Que 25: வீட்டில் வேளாண்மை செய்வதற்குத் தேவையான அறிவுரைகளை எடுத்துரைக்க க்கோரி வேளாண் அதிகாரிக்குக் கடிதம் எழுதுக** ***Marks :(4)***

**Ans:** கடிதம்-வடிவம்- கருத்துகள்

**Que 26: வினா-15** ***Marks :(5)***

**வயல் நிலங்கள் பல்வேறு காரணங்களுக்காக அழிக்கப்பட்டு வருவதை**

**அப்பகுதியிலுள்ள அதிகாரிக்கு எடுத்துரைத்துப் புகார் கடிதம் எழுதுக**

**Ans:** கடிதம்-வடிவம்-நிலங்களின் அழிவு- தீமைகள்-உணவு பற்றாக்குறை

**Que 27: கீழ் வரும் பாடலை நயம் பாராட்டி எழுதுக**

**“கார் நடக்கும் படி நடக்கும் காராளர் தம்முடைய**

**ஏர் நடக்கும் எனில் புகழ்சால் இயலிசை நாடகம் நடக்கும்**

**சீர் நடக்கும் திறம் நடக்கும் திருவறத்தின் செயல் நடக்கும்**

**பார் நடக்கும் படை நடக்கும் பசி நடக்க மாட்டாதே.”** ***Marks :(4)***

**Ans:** பாடல் கருத்து-வேளாண்மையின் முக்கியத்துவம்---உணவின் முக்கியத்துவம்-நயம் பாராட்டுதல்

**Que 28: பூச்சிகளைக் கொல்லும் விஷமும்**

**களைகளைக் கொல்லும் விஷமும்**

**அழகு அழகான புட்டிகளில்**

**உரக்கடைகளை அலங்கரித்தன.-கவிஞர் சுயம்புலிங்கம்**

**கவிஞர் சுயம்புலிங்கம் உணர்த்தும் வேளாண் பிரச்சினைகளைப் பட்டியலிட்டு விளக்கக் குறிப்பு தயாரிக்க** ***Marks :(5)***

**Ans:** வேளாண்மைப் பிரச்சினைகள்-தொடர்பான செய்திகள்—விளக்கம்

**Que 29: கீழ் வரும் பகுதியை விமர்சனம் செய்து எழுதுக.**

**விஷ மருந்துகளும்**

**உப்பு உரங்களும்**

**நம்ம நிலத்தைக் கெடுத்து**

**நம்ம நிலத்தைப் புண்ணாக்கி**

**நம்ம நிலத்தைக் குற்றுயிர் ஆக்கிவிட்டன.** ***Marks :(4)***

**Ans:** இரசாயன உரங்கள்-பூச்சிக்கொல்லி மருந்துகள்-விமர்சனப்பாங்கு